FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

(BNSS பிரிவு 173 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120359

1 District மாவட்டம் [illegible] PS காவல்நிலையம் [illegible] Year ஆண்டு 2025 FIR No. முத.அ. எண் 01 Date நாள் 11/7/2025

2 (i) Act சட்டம் Prevention of Corruption Act -1988 (as amended in 2018) Sections பிரிவுகள் 7

(ii) Act சட்டம் Sections பிரிவுகள்

(iii) Act சட்டம் Sections பிரிவுகள்

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3 (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 10/7/25 Date to : நாள் வரை

Time Period நேர அளவு Time from நேரம் முதல் 11.00hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11/7/25 Time : நேரம் 08:00hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4 Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2 கி.மீ. திருத்தி

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : [illegible] குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : பதிர் சுகமது தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு உத்து 44 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Housewife (g) Address : முகவரி [illegible]

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

[illegible]

8 Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

B-ராமன்.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் [illegible]
Rank: நிலை .....No. எண் .....

கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2025-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 11.07.2025 பணியில் இருந்த போது காலை 08.00 மணியளவில் திருச்சி, ஏர்போர்ட், வள்ளுவர் நகர், கபரஸ்தான் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் பசிர் அகமது மனைவி திருமதி.B.ராபியா @ ராபியத்துல் பஸ்ரியா என்பவர் திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, கிழக்கு தாலுக்கா அலுவலகத்தில் பணிபுரியும் சர்வேயர் திருமதி.தையல்நாயகி மற்றும் புகார்தாரர் திருமதி.B.ராபியா @ ராபியத்துல் பஸ்ரியா ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 11.07.2025 காலை 08.45 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.09/2025 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் B.ராபியா @ ராபியத்துல் பஸ்ரியா, க/பெ.பசிர் அகமது, No.5, வள்ளுவர் நகர், கபரஸ்தான் தெரு, ஏர்போர்ட், திருச்சி-7. பெறுநர் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி. அய்யா, நான் திருச்சி மாவட்டம், ஏர்போர்ட், கபரஸ்தான் தெரு, வள்ளுவர் நகரில் வசித்து வருகிறேன். திருச்சிராப்பள்ளி மாவட்டம், கொட்டப்பட்டு கிராமம், VIMAN VIHAR-ல் கட்டுப்பட்ட மனை எண்.4க்கு விஸ்தீர்ணம் 3364 சதுரடி கொண்ட மனையிடத்தில் தென்புறத்தில் கட்டுப்பட்ட 1362 சதுரடிகள் கொண்ட மனையை பவர் ஏஜெண்ட்டான அசோக்குமார் என்பவரிடமிருந்து வாங்கி எனது கணவர் பெயரில் 16.05.2025ஆம் தேதி கே.சாத்தனூர் பத்திர பதிவு அலுவலகத்தில் 2851/2025படி பதிவு செய்துள்ளோம். மேற்படி பத்திரப்பதிவின்படி என் கணவருக்குரிய வீட்டு மனைக்கு தனிப்பட்டா வழங்க கேட்டு 12.06.2025 தேதி ஆன்லைன் மூலம் எனது கணவர் பெயரில் விண்ணப்பம் செய்தோம். 07.07.2025 தேதியில் எனது செல்போனில் கிழக்கு தாலுக்கா அலுவலகத்திலிருந்து சர்வேயர் பேசுவதாக கூறி ஒரு பெண்மணி என்னிடம் பேசி, மனையை அளக்க வேண்டும் என்று கூறி நாளை காலை 10 மணிக்கு தன்னை செல்போனில் கூப்பிடும்படி சொன்னார். நான் 08.07.2025 தேதி காலை அவருக்கு செல்போனில் கூப்பிட்ட போது ஒரு வேலையாக உள்ளது மதியம் கூப்பிடுங்கள் என்று சொன்னார். நானும் மதியம் 2 மணியளவில்

கூப்பிட்ட போது மதியம் காப்பாட்டுக்கு பிறகு நிலத்தை அளக்க ஒரு சையலாளரை அனுப்பி வைக்கிறேன் அப்போது என் செல்லையும் அவரிடம் கொடுத்து அனுப்புகிறேன் என்று கூறினார். அதன்படி 08.07.2025 தேதி மதியம் 2 மணிக்கு மேல் அவருடைய செல்போனில் பேசியபோது ஒரு பையன் வருவதாக கூறி மதியம் 2.30 மணிக்கு வந்து எங்களுடைய நிலத்தை அளத்துவிட்டு சென்றார். 09.07.2025 தேதி மீண்டும் சர்வேயர் தையல்நாயகி என்னை அழைத்து தாலுக்கா அலுவலகத்திற்கு வரும்படி செல்போனில் சொன்னார். எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் 09.07.2025 தேதி தாலுக்கா அலுவலகத்திற்கு செல்லமுடியாத காரணத்தால் 10.07.2025 தேதி காலை 11 மணியளவில் நான் தாலுக்கா அலுவலகம் சென்று சர்வேயர் தையல்நாயகி என்பவரை சந்தித்து எனது கணவர் பெயரில் உள்ள பத்திரத்தின் காப்பியை கொடுத்தபோது சர்வேயர் தையல்நாயகி என்னிடம் உங்களுடைய மனைக்கு பட்டா உட்பிரிவு செய்வது பெரிய வேலை, கம்மா வந்தா போதுமா, என்னை கவனிக்கிறது இல்லையா என்று கூறினார். அதற்கு நான் அவரிடம், என்ன மேடம் கவனிக்கிறது என்று கேட்டேன், அதற்கு அவர் என்னிடம் ஒரு மனைக்கு உட்பிரிவு செய்ய ரூபாய் 15000 வாங்குவேன் நீங்க ரூபாய் 13000 மட்டும் கொடுங்க என்று சொன்னார். நான் ஆன்லைன் பதிவு செய்ய ரூபாய் 60 கட்டியுள்ளேன் என்று கூறினேன். அதற்கு சர்வேயர் தையல்நாயகி என்னிடம், நான் கேட்கிறது எனக்கு தனியா நீங்க கொடுத்து கவனிக்க வேண்டிய பணம் என்று சொல்லி கொண்டே, ரூபாய் 13000 கொடுங்க உங்க வேலையை சீக்கிரம் முடிச்சி உங்களுக்கு தனிப்பட்டா கிடைக்க ஏற்பாடு செய்றேன், இல்லைன்னா ஒருவருஷம் அலைஞ்சாலும் உங்களுக்கு தனிப்பட்டா கிடைக்காது என்று சொல்லி நாளை காலை 10 மணிக்கு பணத்தோட தாலுக்கா வந்து என்னை பாருங்க என்று சொன்னார். நான் அப்போதைக்கு அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் என்னிடம் லஞ்சம் கேட்ட திருச்சி மாவட்டம், கிழக்கு தாலுக்கா அலுவலகத்தில் பணிபுரியும் சர்வேயர் தையல்நாயகி மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் இப்படிக்கு, Sd.xxx (B.ராபியா) 11.07.2025 Submitted to the Court of the Hon'ble Principal District and Sessions Judge, Trichy. Received this report on 11.07.2025 at 8.00 hrs and registered a case in Trichy V&AC Cr.No.09/2025 u/s 7 of the PC Act-1988 (as amended in 2018) on 11.07.2025 at 08.45 hrs. Sd.xxx (A.PRASANNA VENKATESH) 11/7/2025 Insp., V&AC, Trichy.

11/7/2025
Insp. V&AC, Trichy.